**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி:22.09.2022

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சின்ன வெங்காயம் விலைப் பற்றிய இடைக்கால சந்தை ஆலோசனை**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டமானது, சின்ன வெங்காயத்திற்கான விலை முன்னறிவிப்பை உருவாக்கியுள்ளது.

இந்தியாவின் 90 சதவீத சின்ன வெங்காயம் தமிழ்நாடு மற்றும் கர்நாடகாவிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது. சின்ன வெங்காயம் பயிரிடுவதிலும், வியாபாரம் செய்வதிலும் தமிழகத்திற்கு கர்நாடகா முக்கிய போட்டியாளராக உள்ளது.தமிழ்நாட்டில், வேளாண் மற்றும் விவசாய நல அமைச்சகத்தின் இரண்டாவது முன் கூட்டிய மதிப்பீட்டின் படி, 2021 -22ஆம் ஆண்டில் சின்ன வெங்காயம் 0.54 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 5.66 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

நாமக்கல், பெரம்பலூர், திருச்சி, திண்டுக்கல், கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் சின்ன வெங்காயம் அதிகளவு பயிரிடப்படுகின்றது. தற்போது, கோயம்புத்தூர் சந்தைக்கு சின்ன வெங்காயம் வரத்தானது கரூர், திண்டுக்கல், ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களிலிருந்து வருகிறது. மேலும், வர்த்தக மூலகங்களின் படி, புரட்டாசி பட்ட விதைப்புக்கான தேவை மற்றும் வரும் மாதங்களில் பண்டிகை தேவை அதிகரிப்பால் சின்ன வெங்காயத்தின் விலை ஏற்றத்துடன் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விலை முன்னறிவிப்புத் திட்டம், திண்டுக்கல் சந்தையில் நிலவிய சின்ன வெங்காயம் விலையை மற்றும் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வுகளின் அடிப்படையில், வரும் அக்டோபர்'2022 மாத இறுதி வரை தரமான சின்ன வெங்காயம் சராசரி பண்ணை விலை கிலோவிற்கு ரூ. 45 முதல் 50 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. மேலும், கர்நாடாகாவிலிருந்து வரும் வரத்து மற்றும் பருவ மழையை பொறுத்து சின்ன வெங்காயத்தின்

விலையில் மாற்றங்கள் இருக்கும். எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில், சந்தை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் ,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ,
கோயம்புத்தூர்-641 003.
தொலைபேசி- 0422-2431405 .

இயக்குனர் மற்றும் முனை அதிகாரி,
தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்
நீர் நுட்ப மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641 003.
தொலைபேசி -0422-6611278.

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்,
காய்கறிப் பயிர்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண் - 0422-6611374

**மக்கள் தொடர்பு அலுவலர்**